பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
15 06 2025 7 15
ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி சைப்ரஸ், கனடா உள்ளிட்ட 3 நாடுகளில் இன்று முதல் ஐந்து நாட்கள் அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறார்.

2. நாட்டின் பாதுகாப்பிற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தோரை அடையாளம் காண டி.என்.ஏ பரிசோதனை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

4. கேரளாவில் மலப்புரம், கோழிக்கோடு, வயநாடு உள்ளிட்ட 5 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும் என்பதால் சிவப்பு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

5. ப்ரோ ஹாக்கி லீக் போட்டியின் மகளிர் மற்றும் ஆடவர் பிரிவில் இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி சைப்ரஸ், கனடா, குரோஷியா ஆகிய நாடுகளுக்கு 5 நாட்கள் அரசுமுறைப் பயணமாக இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

சைப்ரஸ் அதிபரின் அழைப்பின்பேரில் புதுதில்லியில் இருந்து இன்று காலை அந்நாட்டுக்கு புறப்பட்டுச் செல்லும் பிரதமர், தனது பயணத்தின்போது அந்நாட்டின் அதிபர் திரு. **Nikos Christodoulides** உள்ளிட்ட தலைவர்களை சந்தித்துப் பேசுவார்.

இந்திய பிரதமர் ஒருவர் 20 ஆண்டுகளுக்குப் பிறகு சைப்ரஸ் செல்வது இதுவே முதல் முறையாகும்.

அந்நாட்டின் தலைநகர் **Nicosia**-வில் அதிபரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து அவர் பேச்சுகள் நடத்த உள்ளார்.

பின்னர் **Limassol**-லில் சைப்ரசின் வணிக பிரதிநிதிகளை அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தவும், மத்திய தரைக்கடல் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடனான இந்தியாவின் உறவுகளை வலுப்படுத்தவும், பிரதமரின் பயணம் உதவும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தனது பயணத்தின் இரண்டாவது கட்டாக கனடா செல்லும் பிரதமர், அந்நாட்டின் பிரதமர் திரு. **Mark Carney** அழைப்பின்பேரில் நாளை கனடாவில் உள்ள **Kananaskis**-ல் நடைபெற உள்ள ஜி-7 நாடுகளின் உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.

இந்த மாநாட்டில் எரிசக்தி, பாதுகாப்பு, தொழில்நுட்பம் மற்றும் புதுமையான கண்டுபிடிப்புகள் உள்ளிட்டவை தொடர்பாக விவாதிக்கப்பட உள்ளது.

செயற்கை நுண்ணறிவு, தொழில்நுட்பம் மற்றும் எரிசக்தி தொடர்பாகவும் இந்த ஜி-7 நாடுகளின் தலைவர்கள், பிற நாடுகளின் தலைவர்களுடன் கருத்துகளை பரிமாறிக்கொள்ள உள்ளனர்.

உச்சிமாநாட்டின்போது பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் பிரதமர் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுகள் நடத்த உள்ளார்.

தமது பயணத்தின் இறுதியாக வரும் 18ஆம் தேதி குரோஷியா செல்ல திரு. நரேந்திர மோடி செல்கிறார்.

இந்திய பிரதமர் ஒருவர் குரோஷியா செல்வது இதுவே முதல்முறை என்பதால் அவரது பயணம், இருதரப்பு உறவில் முக்கிய மைல்கல்லாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

அந்நாட்டின் பிரதமர் திரு. **Andrej Plenkovic**, ஜனாதிபதி திரு. **Zoran Milanovic** ஆகியோரை திரு. நரேந்திர மோடி சந்தித்துப் பேசுகிறார்.

<<<>>>

நாட்டின் பாதுகாப்பிற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளிப்பதாகவும், இந்தியாவின் இறையாண்மைக்கு குந்தகம் விளைவிக்கும் எந்தவொரு செயலுக்கும் கடுமையான பதிலடி தரப்படும் என்றும் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா எச்சரித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலத்தின் அழகிய சுற்றுலாத்தலமான **Pachmarhi**-யில் பிஜேபி நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சி முகாமை தொடங்கி வைத்து அவர் உரையாற்றினார்.

நாட்டின் நலன்களைப் பாதுகாப்பதில் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை எடுத்துரைத்த அவர், கட்சி மற்றும் தேசத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஒழுக்கம், சித்தாந்த அர்ப்பணிப்பு மற்றும் பொது சேவையின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

பாதுகாப்பான, வளர்ந்த மற்றும் வளமான இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையை சுட்டிக்காட்டிய திரு. அமித் ஷா, இதை செயல்படுத்தும் வகையில் மத்திய அரசு தீவிரமாக செயல்பட்டு வருவதாக கூறினார்.

கடந்த 11 ஆண்டுகளில் மத்திய அரசு 26 கோடி பேர் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும், 7 கோடி குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளை செய்துகொடுத்துள்ளதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

இந்த முகாமில் 200க்கும் மேற்பட்ட பிஜேபி நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர்.

<<<>>>

உத்தரப்பிரதேச மாநில காவல்துறைக்கு புதிதாக 60 ஆயிரத்து 244 காவலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

லக்னோவில் இன்று நடைபெற உள்ள விழாவில் இவர்களுக்கான பணி நியமன ஆணைகளை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வழங்க உள்ளார்.

முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் தலைமையில் நடைபெற உள்ள விழாவில் காவல்துறையினர் அணிவகுப்பும் நடைபெற உள்ளது.

புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள காவலர்களில் 12 ஆயிரத்து 48 பேர் மகளிர் என்பது குறிப்பிடத்தக்கது.

<<<>>>

அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தோரை அடையாளம் காண டி.என்.ஏ பரிசோதனை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நேற்று வரை 19 டி.என்.ஏ. மாதிரிகள் சரிபார்க்கப்பட்டுள்ளதாக குஜராத் மாநில உள்துறை இணையமைச்சர் திரு. **Harsh Sanghvi** தெரிவித்துள்ளார்.

தடயவியல் குழுக்கள் இரவு முழுவதும் டி.என்.ஏ. மாதிரிகளை உயிரிழந்தோர் உடலுடன் பொருத்திப் பார்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக அவர் கூறினார்.

விமான விபத்தில் பலியான குஜராத் முன்னாள் முதலமைச்சர் விஜய் ரூபானியின் இறுதிச்சடங்கு ராஜ்கோட்டில் நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

டி.என்.ஏ. பரிசோதனையின் முடிவைப் பொறுத்து தேதி மாறுபடும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையே விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவுவதற்காக அகமதாபாத் மருத்துவமனையில் போதுமான ஆம்புலன்ஸ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மருத்துவமனையின் கண்காணிப்பாளர் டாக்டர் ராகேஷ் ஜோஷி தெரிவித்தார்.

<<<>>>>

இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லாவை சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அழைத்துச் செல்லும் மிகவும் எதிர்பார்க்கப்படும் **Axiom-4** பயணத் திட்டம் இம்மாதம் 19ஆம் தேதி திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக இந்தப் பயணத்தி திட்டம் முன்னதாக ஒத்திவைக்கப்பட்டது.

விண்வெளி வீரர்களை ஏந்திச்செல்ல உள்ள பால்கன்-9 ராக்கெட்டில் திரவ ஆக்சிஜன் கசிவு பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், பயணத்திட்டம் குறித்த புதிய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

<<<>>>>

கேரளாவில் மலப்புரம், கோழிக்கோடு, வயநாடு, கன்னூர் மற்றும் காசர்கோடு ஆகிய 5 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் அம்மாவட்டங்களில் சிவப்பு எச்சரிக்கை விடப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கேரளாவில் கடந்த மாதம் 24ஆம் தேதி தென்மேற்குப் பருவமழை முன்கூட்டியே தொடங்கியதையடுத்து, அடுத்தடுத்த நாட்களில் கனமழை பெய்தது.

சிறிது நாட்கள் ஓய்ந்திருந்த நிலையில், கடந்த இரண்டு நாட்களாக மீண்டும் பருவமழை தீவிரமடைந்துள்ளது.

அம்மாநிலத்தின் வட மாவட்டங்களில் இன்று மிக கனமழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

பாலக்காடு, திருச்சூர், எர்ணாகுளம், இடுக்கி, கோட்டயம் மற்றும் பத்தனம்திட்டா ஆகிய 6 மாவட்டங்களில் கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இதற்கிடையே தமிழகத்தில் மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள தென்காசி, திருநெல்வேலி, கோவை மாவட்டங்களின் மலைப் பகுதியை ஒட்டியுள்ள இடங்களில் பலத்த மழை பெய்துள்ளது.

இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

தென்காசி மாவட்டம் குற்றாலம் அருவிகளை ஒட்டிய மலைப் பகுதிகளில் மழை குறைந்துள்ளதால் அருவிகளில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டிய நீலகிரி மாவட்டத்தில் அவ்வப்போது பெய்துவரும் மழையால் அவலாஞ்சி, எமரால்டு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு நாளுக்கு நாள் சீர்குலைந்து வருவதாக பாமக குற்றம் சாட்டியுள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் விடுத்துள்ள அறிக்கையில், வேலூர் மாவட்ட பாமக நிர்வாகி துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

மாநிலத்தில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ள நிலையில், உண்மையான குற்றவாளிகளை கைது செய்யாமல் போலியான குற்றவாளிகளை காவல்துறையினர் கைது செய்வதால் தொடர்ந்து குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மேற்காசியாவில் பதற்றத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகளை அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப்பும், ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடினும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

நேற்று அதிபர் திரு. ட்ரம்பின் 79வது பிறந்தநாளை முன்னிட்டு அவருக்கு திரு. விளாடிமிர் புடின் வாழ்த்து தெரிவித்தார்.

அப்போது, மேற்காசியாவில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை குறித்து இருவரும் விவாதித்ததாக திரு. ட்ரம்ப் கூறியுள்ளார்.

ஒரு மணி நேரம் நீடித்த இந்த தொலைபேசி உரையாடலின்போது இஸ்ரேல் - ஈரான் இடையே ஏற்பட்டுள்ள மோதலை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து இருவரும் விரிவாக விவாதித்ததாக தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையேயான மோதல் விரைவில் முடிவுக்கு வர வேண்டும் என்று இருவரும் தெரிவித்ததாகவும் அமெரிக்க அதிபர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இஸ்ரேல் விமானப் படையினர் இன்று அதிகாலை ஏமனில் குறிப்பிட்ட இலக்குகளைக் குறிவைத்து தாக்குதல் நடத்தினர்.

ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மறைவிடங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியின் மகளிர் மற்றும் ஆடவர் பிரிவில் இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

பெல்ஜியத்தில் ஆடவர் அணி பங்கேற்கும் ஆட்டம் பிற்பகல் 2 மணிக்கு தொடங்குகிறது.

லண்டனில் நடைபெறும் மகளிர் பிரிவு ஆட்டம் பிற்பகல் 3 மணிக்கு தொடங்குகிறது.

**<<<<>>>>**

போர்ச்சுகல் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – பிரான்சின் **Alice Robbe** இணை பட்டம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 1-6, 6-4, 10-8 என்ற செட் கணக்கில் ஜப்பானின் **Hiromi Abe – Konako Morisaki** இணையை வென்றது.

**<<<<The End>>>>**